X- A

ப.எண் / Reg.No |  |  |  |  |  |  |

T

(A)

# மாதிரி மன்றத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

## Language - TAMIL

நேரம்: 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள்: 100

*அறிவுரை:* 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரியப்படுத்தவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

*குறிப்பு:* i) இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** 15x1=15

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ....................

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும்காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி" என்னும் தொடர் இடம் பெற்ற நூல் ................

அ) கொன்றை வேந்தன் ஆ) நீதிவெண்பா

இ) திருக்குறள் ஈ) நற்றிணை

3. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..................

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம் நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

4. "குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்" என்பது .............. வழுவமைதி ஆகும்.

அ) பால் ஆ) திணை இ) இட ஈ) கால

5. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் .....................

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

6. காற்றின் மெல்லிய ................ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான .................பூக்களை மாலையாக்குகிறது.

அ) தொடுத்தல், எடுத்தல் ஆ) தொடுதல், தொடுத்தல்

இ) எடுத்தல், தொடுதல் ஈ) தொடுத்தல், தொடுதல்

7. 'மாளாத காதல் நோயாளன் போல்' - இத்தொடரில் வெளிப்படுவது .................... அணி.

அ) தற்குறிப்பேற்ற ஆ) உவமை இ) உருவக ஈ) எடுத்துக்காட்டுவமை

8. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்

இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

9. "எவ்வெவை" - என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு .....................

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

10. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ....................

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

11. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*"மாற்றம் எனது மானிடத் தத்துவம்*
*மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்*
*எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை*
*என்பதறிந்து ஏகுமென் சாலை*
*தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்*
*தத்துவம் மட்டுமே அட்சயப் பாத்திரம்!"*

12. இப்பாடலின் ஆசிரியர் .................

அ) ஔவையார் ஆ) கண்ணதாசன் இ) கபிலர் ஈ) பாரதியார்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தலைப்பு ....................

அ) காலக்கணிதம் ஆ) மகத்துவம் இ) வாடா மலர் ஈ) கணிதம் கற்றேன்

14. 'ஏகுமென்' - இத்தொடரின் பொருள் ....................

அ) வெல்லும் ஆ) செல்லும் இ) நடக்கும் ஈ) பாதை

15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

அ) மாற்றம், மாறும் ஆ) தலைவர், மாறுவர்

இ) எவ்வெவை, மட்டுமே ஈ) என்பதறிந்து, தத்துவம்

## பகுதி - II *(மதிப்பெண்கள் : 18)*

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. *21*ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4x2=8

16. *விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*

அ) காற்று தெற்கிலிருந்து வீசும் போது தென்றல் காற்று எனப்படுகிறது.

ஆ) கரகாட்டத்தின் துணையாட்டமாக மயிலாட்டம் ஆடப்படுகிறது.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. 'இறடிப்பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

20. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5x2=10

22. தொடரில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை மீள எழுதுக.

கொடை வள்ளல் குமணன் <u>வறுமையால்</u> வாடிவந்த <u>புலவனுக்குத்</u> தனது தலையைக் <u>கொடுத்து</u> மங்காப் <u>புகழ்</u> பெற்றான்.

23. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.

(காற்று, விண்மீன், புதுமை, காடு)

அ) பழமைக்கு எதிரானது ; எழுதுகோலில் பயன்படும்.

ஆ) ஓரெழுத்தில் சோலை ; இரண்டெழுத்தில் வனம்.

24. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

விதி - வீதி

25. கலைச்சொற்கள் தருக.

அ) Thesis

ஆ) Terminology

26. புறத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

நீரற வறியாக் கரகத்து புறம் 1 என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெறுகிறது

28. தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III *(மதிப்பெண்கள் : 18)*

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்பபடுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

30. கல்வி கற்பதற்காக மேரி செய்த முயற்சிகள் குறித்து எழுதுக.

31. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில் தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

அ) காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தை எங்கு தொடங்கி வைத்தார்?

ஆ) சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. *34*ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2x3=6

32. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

33. மருத நிலக் காட்சியைக் கம்பர் எவ்வாறு வருணிக்கிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

"சிறுதாம்பு" ... எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

*(அல்லது)*

"தூசும் துகிரும்" ... எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடலை எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து இறங்கினார் வேலன். அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

36. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ

டைந்துடன் மாண்ட தமைச்சு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விவரி.

*பகுதி* - IV *(மதிப்பெண்கள் : 25)*

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 5x5=25

38. அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) ஜல் புயல் சென்னைக்குக் கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு கடலூருக்கும், தூத்துக்குடிக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

புயலின் போது வெளியே செல்ல வேண்டாம்.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................
5. ..........................................................................................

*(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V *(மதிப்பெண்கள் : 24)*

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3x8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) *கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம் !*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை; அறிக!*

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் கவிதை நயங்களைப் பாராட்டி எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

*(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று தருக.

தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

*(அல்லது)*

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

*****